**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 10 (LW15)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனிராஜசேகரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | சந்திரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கீழநரியன் கிராமத்தில் குடியிருந்து, டிராக்டர் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன கருப்பையாவை எனக்குத் தெரியும். சாட்சி வளர்மதி என்பவரை எனக்குத் தெரியும். சாட்சிகள் தங்கப்பாண்டி, சௌந்தர்ராஜன் என் உடன்பிறந்த சகோதரர்கள். கருப்பையா இறந்துகிடந்ததற்கு முதல்நாள் மாலை 06.00 மணிக்கு என் உடன்பிறந்த தம்பி தங்கப்பாண்டியும் கருப்பையாவும் எனது வீட்டிற்கு வந்தார்கள். கருப்பையா தான் புதிதாக கட்டிக்கொண்டிருக்கும் வீட்டிற்கு ஜல்லி வேண்டும் என்று கேட்டார். நான் அனுப்புகிறேன் என்று சொன்னேன். பின்னர் கருப்பையா மட்டும் அவரது Hero Honda இருசக்கர வாகனத்தில் அவரது வீட்டிற்கு புறப்பட்டு போனார்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:48 +0530

மறுநாள் காலை 05.00 மணிக்கு ஜல்லி எடுத்துக்கொண்டுவர ரெட்டியாபட்டிக்கு போனேன். நான் போனபோது எங்கள் ஊர் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் ஒரு பைக் கீழே கிடந்தது. யாருடைய பைக் என்று எனக்குத் தெரியாததால் நான் சென்றுவிட்டேன். நான் போகும் வழியில் என் தம்பி தங்கப்பாண்டி காலை 08.00 மணிக்கு எனக்கு போன் செய்து கருப்பையா இறந்துவிட்டார் என்ற விவரத்தை சொன்னார். நான் திரும்ப வீட்டிற்கு சென்றுவிட்டேன். எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். இந்த விவரத்தைத்தான் சொன்னேன்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை

29.07.2021ம் தேதி என் வீட்டிற்கு ஜல்லி வாங்குவது சம்மந்தமாக கருப்பையா தங்கப்பாண்டியுடன் வந்த போது, இரவு 08.00 மணியளவில் எங்கள் ஊர் கொடிக்கம்பத்தில் எதிரிகள் ரமேஷ்குமார், சுரேஷ்குமார், ராஜ்குமார், சரத்குமார், கணபதி பாண்டி, முத்துராஜ், காளிதாஸ் ஆகியோர்கள் உட்கார்ந்து இருந்தார்கள் என்றும், அவர்கள் எனது தம்பியையும், கருப்பையாவையும் பார்த்ததாகவும் எனது தம்பி என்னிடம் சொன்னார் என்றும், கருப்பையாவின் ஊரை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை 1ம் எதிரி ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்துவிட்டதால் 1ம் எதிரி ரமேஷ்குமாரை இறந்துபோன கருப்பையா மற்றும் அவரது ஊரை சேர்ந்தவர்களும் கட்டி வைத்து அடித்ததால், 1ம் எதிரிக்கும் இறந்துபோன கருப்பையாவிற்கும் முன்விரோதம் இருந்தது என்றும், மேலும் கருப்பையா அதிகமாக குடிபோதையில் இருந்ததால் கருப்பையாவை இப்போது



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:52 +0530

வீட்டிற்கு போக வேண்டாம், நீ எனது வீட்டிலேயே தங்கிவிட்டு காலையில் போகலாம் என்று சொன்னேன் என்றும், ஆனால் கருப்பையா வீட்டிற்கு போகவேண்டும் என சொல்லிக்கொண்டு இருந்தார் என்றும், இரவு மணி 08.00 க்கு மேல் ஆகிவிட்டதால் கருப்பையா வீட்டிற்கு வராத காரணத்தினால் அவரது மனைவி எனக்கு போன் செய்து எனது கணவர் அங்கு வந்தாரா என்று கேட்டார் என்றும், நான் கருப்பையா அதிகமான போதையில் இருப்பதால் வீட்டிற்கு செல்ல வேண்டாம் என தடுத்தேன் என்றும், ஆனால் அவர் நான் சொல்வதை கேட்காமல் கிளம்பிக்கொண்டிருக்கிறான் என்று சொன்னேன் என்றும், அதற்கு வளர்மதி எனது கணவரை காலையில் அனுப்பிவிடுங்கள் என்று சொல்லி போனை வைத்துவிட்டார் என்றும், ஆனால் கருப்பையா நான் சொன்னதை கேட்காமல் அவரது இருசக்கர வாகனத்தில் கிளம்பி சென்றுவிட்டார் என்றும், மறு நாள் காலை 05.30 மணியளவில் எனது தம்பி மற்றொரு தம்பி சௌந்தரராஜன், வளர்மதிக்கு போன் செய்து கருப்பையா எங்கே என கேட்டுள்ளார் என்றும், அதற்கு வளர்மதி உங்க வீட்டிற்குதானே வந்திருக்காரு என சொல்லியுள்ளார் என்றும், அதற்கு என் தம்பி சௌந்தர்ராஜன் நான் சாயல்குடிக்கு வந்துவிட்டேன் எனது மனைவிடம் கேட்டுச்சொல்கிறேன் என சொல்லிவிட்டு, எனது தம்பி எனக்கு போன் செய்து கருப்பையா இருக்கிறாரா என்று என்னிடம் கேட்டார் என்றும், அதற்கு நான் கருப்பையா நேற்று இரவே நம்ம வீட்டிற்கு வந்துவிட்டு, இரவே கிளம்பி சென்றுவிட்டார் என்றும் என சொன்ன விவரத்தை போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

உடனடியாக இந்த விவரத்தை எனது தம்பி, வளர்மதிக்கு போன் செய்து சொல்லவும், வளர்மதியும் அவரது மகள்களும் கருப்பையாவை தேடி சென்ற போது, கீழநரியன்குடி பஸ் ஸ்டாப் அருகே கருப்பையாவின் இருசக்கர வாகனம் முன்பகுதி உடைந்து இரத்தக்கரையுடன் கிடந்ததாகவும், கருப்பையா



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:55 +0530

கீழநரியன் பஸ் ஸ்டாப் அருகே இறந்து கிடந்ததாகவும் இதனை கேள்விப்பட்ட நானும் சௌந்தரபாண்டியனும் சம்பவ இடத்திற்கு சென்றால் பிரச்சனை ஏற்படும் என்பதால் நாங்கள் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும், பின்னர் கருப்பையாவின் இறப்பு குறித்து விசாரித்த போது, ரமேஷ்குமாரால் இறந்ததாக கேள்விப்பட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:48:58 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .